# திருவழிபாட்டின் திருமணிகள்

## கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் சங்கீதமாலை

முதல்: இறைவா, எமக்குத் துணைபுரிய வாரும்
எல்: ஆண்டவரே, எமக்குத் துணைபுரிய விரைந்து வாரும்
முதல்: பிதாவுக்கும் சுதனுக்கும்...

பாடல்:

## என் தெய்வம் என்னில் வா

என் தெய்வம் என்னில் வா
என்னோடு உறவாட வா
என்னுள்ளம் உன்னில்லம் ஆக்கிடவா
என்னை நீ ஆளவா 2

1. அகத்தின் இருளை அகற்றும் அருளை
பொழிவாய் நின் வரவால் 2
நெஞ்சார உன்னை எந்நாளும் போற்றும்
நள்ளுள்ளம் அருள வா
என் தெய்வமே மகிமை மன்னவா 2

2. அல்லலின் உழலும் அடியோர் எமக்கு
ஆறுதல் அளிக்கவா 2
அன்போடு யாமும் பண்போடு வாழ
வரமும் பொழியவா
என் தெய்வமே மகிமை மன்னவா 2

3. வேந்தனும் ஆயனும் ஆன என் தேவனே
மாந்தரைக் காத்திடவா 2
உம்மோடு என்றும் ஒன்றிக்கும் வரையும்
என் உள்ளம் எழுந்து வா
என் தெய்வமே மகிமை மன்னவா 2



## மன்றாட்டுக்கள்

உலகம் வாழ்வதற்காகத் தம்முடைய உடலையும் இரத்தத்தையும் கொடுக்கிற கிறிஸ்து, நம் அனைவரையும் விருந்துக்கு அழைக்கிறார். உள்ளார்வத்துடன் அவரை அணுகி மன்றாடுவோம்.

**எல்: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நிலைவாழ்வின் உணவை எங்களுக்கு அளித்தருளும்.**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, உயிருள்ள கடவுளின் மகனே, உமது நினைவாக நற்கருணை விருந்தைக் கொண்டாடும்படி, எங்களுக்கு கட்டளை கொடுத்துள்ளீர்:- இந்த மறைப்பொருளை தகுந்த முறையில் கொண்டாடுவதின் வழியாக, உமது திருச்சபையை வளப்படுத்தியருளும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, என்றுமுள்ள தலைமை குருவே, உமது அருளடையாளங்களை நிறைவேற்றும் பணியை குருக்களிடம் ஒப்படைத்தீர்:- அவர்கள் உமக்குப் பணி செய்வதில், தங்களின் கடமையை உண்மையான அன்பினால் விளையும் தவறா மகிழ்ச்சியினால் நிறைவேற்றத் துணைபுரியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, விண்ணகத்தில் இருந்து வந்த மன்னாவே, ஒரே அப்பத்தில் பங்கு பெறும் அனைவரையும் ஓர் உடலாய் ஒன்றுசேர்க்கிறீர்:- உம்மை நம்புவோருக்கு அமைதியையும் ஒற்றுமையையும் தந்தருளும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, விண்ணக மருத்துவரே, உமது உணவை உண்போர்க்கு நோயில் நிலையான விடுதலையையும், உயிர்ப்பிற்கான வாக்குறுதியையும் கொடுக்கிறீர்:- நோயாளிகளுக்கு உடல் நலமும் பாவிகளுக்கு நம்பிக்கையும் அளித்தருளும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, வரவிருக்கும் அரசரே! நாங்கள் இந்த மறைப்பொருளை நிறைவேற்றும் போதெல்லாம், நீர் மீண்டும் வரும்வரை உமது மரணத்தை அறிக்கையிடுகிறோம் என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம்:- உம்மில் இறந்தோர் அனைவரையும் உமது உயிர்ப்பில் பங்குபெறக் கொண்டு வந்தருளும்.

## இறுதி செபம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, இந்த வியப்புக்குரிய அருளடையாளத்திலே உம்முடைய திருப்பாடுகளின் நினைவை உம் திருச்சபைக்கு விட்டுச்சென்றீர்; உமது திருவுடல், திருஇரத்தம் இவற்றின் மறைப்பொருளை வணங்கும் நாங்கள், உம் மீட்பின் பலனை இடைவிடாமல் அனுபவிக்க அருள்புரியும். தந்தையாகிய இறைவனோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே உம்மை மன்றாடுகிறோம். ஆமென். ஆமென்.




பரலோகத்தில் இருக்கிற
எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம்
அர்ச்சிக்கப்படுவதாக.
உம்முடைய இராச்சியம் வருக,
உம்முடைய சித்தம் பரலோகத்தில்
செய்யப்படுவது போல
பூலோகத்திலும் செய்யப்படுவதாக.
எங்கள் அனுதின உணவை
இன்று எங்களுக்குத் தாரும்:
எங்களுக்குத் தீமை
செய்தவர்களை
நாங்கள் பொறுப்பது போல
எங்கள் பாவங்களைப்
பொறுத்தருளும்.
எங்களைச் சோதனையில்
விழவிடாதேயும்
தீமையிலிருந்து எங்களை
இரட்சித்தருளும்.

INTERNAL CIRCULATION ONLY
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Design:* The Mustard Seed Studio

முன்மொழி 1: ஆண்டவராகிய கிறிஸ்து என்றென்றைக்கும் குருவாய் இருக்கிறார்; மெல்கிசெதேக்கைப் போல அப்பத்தையும் இரசத்தையும் ஒப்புக்கொடுத்தார்.

## சங் 110 3:1—5,7

ஆண்டவர் என் தலைவரிடம்,
'நான் உம் பகைவரை உமக்கு
கால்மணையாக்கும்வரை
நீர் என் வலப்பக்கம் வீற்றிரும்' என்று
உரைத்தார்.

வலிமைமிகு உமது செங்கோலை
ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்;
உம் எதிரிகளிடையே ஆட்சி செலுத்தும்!

நீர் உமது படைக்குத் தலைமை தாங்கும் நாளில்
தூய கோலத்துடன் உம் மக்கள் தம்மை
உமக்கு உவந்தளிப்பர்;
வைகறை கருவுயிர்த்த பனியைப்போல
உம் இளம் வீரர் உம்மை வந்தடைவர்.

'மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே'
என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்;
அவர் தம் மனத்தை மாற்றிக் கொள்ளார்.

என் தலைவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்;
தம் சினத்தின் நாளில்
அவர் மன்னர்களை நொறுக்குவார்.

வழியில் உள்ள நீரோடையிலிருந்து அவர் பருகுவார்;
ஆகவே அவர் தலைநிமிர்ந்து நிற்பார்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக. தொடக்கத்திலே
இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக.

### பிதாவுக்கும்...

முன்மொழி 1: ஆண்டவராகிய கிறிஸ்து என்றென்றைக்கும் குருவாய் இருக்கிறார்; மெல்கிசெதேக்கைப் போல அப்பத்தையும் இரசத்தையும் ஒப்புக்கொடுத்தார்.

முன்மொழி 2: நான் மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து நன்றிப் பலியைச் செலுத்துவேன்.

## 116 : 10 — 19

'மிகவும் துன்புறுகிறேன்!' என்று சொன்னபோதும்கூட
நான் நம்பிக்கையோடிருந்தேன்.
'எந்த மனிதரும் நம்பத்தக்கவரல்லர்' என்று
என் கலக்கத்தில் நான் சொன்னேன்.

ஆண்டவர் எனக்கு செய்த எல்லா நன்மைகளுக்காகவும்
அவருக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?
மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து
ஆண்டவரது பெயரை நான் கூவியழைப்பேன்.

ஆண்டவருடைய மக்கள் அனைவரின் முன்னிலையில்
அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.
ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது.

ஆண்டவரே! நான் உண்மையாகவே உம் ஊழியன்;
உம் பணியாள்; உம் அடியாளின் மகன்;
என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர்.
நான் உமக்கு நன்றிப்பலி செலுத்துவேன்;
ஆண்டவராகிய உம் பெயரைக் கூவியழைப்பேன்.

ஆண்டவரே! உம் மக்கள் அனைவர் முன்னிலையிலும்
உமக்கு என் பொருத்தனைகளை நான் செலுத்திடுவேன்;
உமது இல்லத்தின் முற்றங்களில், எருசலேமின் நடுவில்,
ஆண்டவரே! உமக்கு என் பொருத்தனைகளை
நான் செலுத்திடுவேன்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக. தொடக்கத்திலே
இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக.

### பிதாவுக்கும்...

முன்மொழி 2: நான் மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து நன்றிப் பலியைச் செலுத்துவேன்.

முன்மொழி 3: ஆண்டவரே! வழியும் நீரே, உண்மையும் நீரே, உலகின் வாழ்வும் நீரே.

## திருவெளி 19 : 1 — 2, 5 — 7

எல்: அல்லேலூயா.
முதல்: மீட்பும் மாட்சியும் வல்லமையும் நம் கடவுளுக்கே உரியன.
எல்: அல்லேலூயா.
முதல்: ஏனெனில் அவருடைய தீர்ப்புகள் உண்மை உள்ளவை, நீதியானவை.
எல்: அல்லேலூயா.
முதல்: கடவுளின் பணியாளர்களே, நம் கடவுளைப் புகழுங்கள்.
எல்: அல்லேலூயா.
முதல்: அவருக்கு அஞ்சி நடப்பவர்களே, சிறியோர்களே, பெரியோர்களே, நீங்கள் அனைவரும் நம் கடவுளைப் புகழுங்கள்.
எல்: அல்லேலூயா.
முதல்: உன் கடவுளாகிய ஆண்டவர், எல்லாம் வல்லவர்; அவர் ஆட்சி செலுத்துகின்றார்.
எல்: அல்லேலூயா.
முதல்: எனவே மகிழ்வோம், பேருவகையுடன் அவரைப் போற்றிப் புகழ்வோம்.
எல்: அல்லேலூயா.
முதல்: ஏனெனில் ஆட்டுக் குட்டியின் திருமண விழா வந்துவிட்டது.
எல்: அல்லேலூயா.
முதல்: மணமகளும் விழாவுக்கு ஆயத்தமாய் இருக்கிறார்.
எல்: அல்லேலூயா.

### பிதாவுக்கும்...

முன்மொழி : ஆண்டவரே! வழியும் நீரே, உண்மையும் நீரே, உலகின் வாழ்வும் நீரே.

## அருள்வாக்கு 1 கொரிந்தியர் 11:23 - 25

ஆண்டவரிடமிருந்து நான் எதைப் பெற்றுக் கொண்டேனோ, அதையே உங்களிடம் ஒப்படைக்கிறேன். அதாவது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில், அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, ஹூஇது உங்களுக்கான உடல், இதை என் நினைவாகச் செய்யுங்கள்ஹூ என்றார். அப்படியே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து, ஹூஇந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்ஹூ என்றார்.

## சிறு மறுமொழி

முதல்: அவர்கள் உண்ண, விண்ணக உணவை அவர் வழங்கினார். அல்லேலூயா. அல்லேலூயா.
எல்: அவர்கள் உண்ண, விண்ணக உணவை அவர் வழங்கினார். அல்லேலூயா. அல்லேலூயா.
முதல்: வானத்தூதரின் உணவை மனிதர் சுவைத்தனர். அல்லேலூயா. அல்லேலூயா.
எல்: அவர்கள் உண்ண, விண்ணக உணவை அவர் வழங்கினார். அல்லேலூயா. அல்லேலூயா.
முதல்: தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக. அல்லேலூயா. அல்லேலூயா.
எல்: அவர்கள் உண்ண, விண்ணக உணவை அவர் வழங்கினார். அல்லேலூயா. அல்லேலூயா.

## கன்னிமரியின் பாடல்



முன்மொழி: கிறிஸ்துவை நாங்கள் உணவாக உட்கொள்ளும் திருவிருந்தே, உன்னில் அவருடைய திருப்பாடுகள் நினைவுகூரப்படுகின்றன; எங்கள் உள்ளம் அருளால் நிரப்பப்படுகிறது; வருங்கால மாட்சியின் சொல்லுறுதி எமக்கு அளிக்கப்படுகிறது. அல்லேலூயா.

என் ஆன்மா ஆண்டவரில் களிகூருகின்றது
என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம்
களிகூருகின்றது.
ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக்
கடைக்கண் நோக்கினார்.

இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும்,
என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.
ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும்
செயல் பல புரிந்தார். அவர்தம் பெயர் புனிதமாமே.
அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத்
தலைமுறை தலைமுறையாய் உளதாமே.

அவர் தமது கைவன்மையைக் காட்டினார். நெஞ்சிலே
செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்.
வலியோரை அரியணையினின்று அகற்றினார்,
தாழ்ந்தோரை உயர்த்தினார். பசித்தோரை நலன்களால்
நிரப்பினார், செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.

நம் முன்னோருக்கு அவர் சொன்னது போலவே,
ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தோர்க்கும்
என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம்
அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்.

### பிதாவுக்கும்...

முன்மொழி: கிறிஸ்துவை நாங்கள் உணவாக உட்கொள்ளும் திருவிருந்தே, உன்னில் அவருடைய திருப்பாடுகள் நினைவுகூரப்படுகின்றன; எங்கள் உள்ளம் அருளால் நிரப்பப்படுகிறது; வருங்கால மாட்சியின் சொல்லுறுதி எமக்கு அளிக்கப்படுகிறது. அல்லேலூயா.